# மாநில நிர்வாகம்

**ஆளுநர்**

மாநில நிர்வாகத்தின் அரசியலமைப்புத் தலைவர் ஆளுநர் ஆவார். மாநில ஆளுநரின் பெயரில் மாநில நிர்வாகம் செயல்படுகிறது. பொதுவாக ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் ஆளுநர் இருக்கிறார். ஆனால் நிர்வாகச் சூழலின் காரணமாக ஒரு மாநிலத்தின் ஆளுநர் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களின் ஆளுநராகவும் நியமிக்கப்படலாம்.

அரசியலமைப்பு சட்டப்பிரிவு 154 மாநில ஆளுநரின் நிர்வாக அதிகாரத்தைப் பற்றி கூறுகிறது. சட்டப்பிரிவு 154 (1)—ன்படி மாநில ஆளுநரின் நிர்வாக அதிகாரம் ஆளுநரிடம் இருக்க வேண்டும். இந்த அதிகாரம் அவரால் நேரடியாகவோ அல்லது அவரின் கீழுள்ள அலுவலர்களாலோ, அரசியலமைப்பின்படி செயல்படுத்தப்பட வேண்டும்.

**ஆளுநர் நியமனம்**

மாநில ஆளுநர், குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படுகிறார். வழக்கமாக, அவரது பதவிக்காலம் 5 ஆண்டுகள். ஆனால் குடியரசுத் தலைவரின் விருப்பத்தின் பேரில் அவரது பதவிக்காலம் நீட்டிக்கப்படலாம். பொதுவாக, ஒருவர் தனது சொந்த மாநிலத்தின் ஆளுநராக நியமிக்கப்படமாட்டார். மேலும், அவர் குடியரசுத் தலைவரால் ஒரு மாநிலத்திலிருந்து வேறொரு மாநிலத்திற்கு மாற்றப்படலாம். குடியரசுத் தலைவருக்குத் தனது பணித்துறப்பு கடிதத்தைக் கொடுப்பதன் மூலம் ஆளுநர் எந்நேரத்திலும் பதவி விலகலாம்.

மாநில சட்டமன்றமோ அல்லது உயர் நீதிமன்றமோ ஆளுநரின் பணி நீக்கத்தில் பங்கு பெற முடியாது. ஒருவர் எத்தனை முறை வேண்டுமானாலும் ஆளுநராக நியமிக்கப்படலாம். ஒருவரை ஒரு மாநில ஆளுநராக நியமனம் செய்யப்படுவதில் இரண்டு மரபுகள் பின்பற்றப்படுகின்றன. அவை: ஆளுநராக நியமிக்கப்படும் ஒருவர் தான் எந்த மாநிலத்திற்கு ஆளுநராக நியமிக்கப்பட உள்ளாரோ அந்த மாநிலத்தில் வசிப்பவராக இருத்தல் கூடாது. மேலும் ஆளுநராக நியமிக்கப்படும் ஒருவரை மத்திய அரசு, மாநில அரசுடன் கலந்தாலோசித்து அவரது பெயரை முன்மொழிய வேண்டும்.

அரசியலமைப்பு சட்டப்பிரிவு 158 (3A)—ன் படி ஒருவர், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களின் ஆளுநராக நியமிக்கப்படும் பொழுது, குடியரசுத் தலைவர் ஓர் ஆணையின் மூலம், ஆளுநரின் ஊதியம் மற்றும் படிகளை சம்பந்தப்பட்ட மாநிலங்கள் பகிர்ந்து வழங்க தீர்மானிக்கலாம்.

**ஆளுநராவதற்கான தகுதிகள்**

இந்திய அரசியலமைப்பின் 157 மற்றும் 158 வது சட்டப்பிரிவுகள் ஆளுநர் பதவிக்குத் தேவையான பின்வரும் தகுதிகளைக் கூறுகின்றன.

1. அவர் இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
2. 35 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.

3. நாடாளுமன்ற உறுப்பினராகவோ அல்லது சட்டமன்ற உறுப்பினராகவோ இருத்தல் கூடாது. அவ்வாறு இருப்பின் அவர் ஆளுநராக பதவியேற்கும் பொழுது தாமாகவே அப்பதவி காலியாகிவிடும்.
4. மேலும் அவர், இலாபம் தரும் எந்த தொழிலிலும் ஈடுபடக்கூடாது.

**ஆளுநரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்**

ஆளுநர், மாநில நிர்வாகத்தின் தலைவராக செயல்படுவது மட்டுமல்லாமல் ஏராளமான அதிகாரங்கள் பெற்றவராகவும் திகழ்கிறார். சட்டப்பிரிவு 163—ன் படி, முதலமைச்சரின் தலைமையிலான அமைச்சரவையின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின்படி ஆளுநர் குறிப்பிட்ட சில நிகழ்வுகளைத் தவிர மற்ற அதிகாரங்களைச் செயல்படுத்துகிறார். மாநில நிர்வாகத் தலைவராக ஆளுநர் பின்வரும் அதிகாரங்களைப் பெற்று பணிகளைச் செய்கிறார்.

**நிர்வாக அதிகாரங்கள்**

1. இந்திய அரசியலமைப்பு, மாநில நிர்வாகத்தின் அனைத்து அதிகாரங்களையும் ஆளுநருக்கு வழங்குகிறது. இவற்றைஆளுநர் நேரடியாகவோ அல்லது அவரின் கீழுள்ள அலுவலர்கள் மூலமோ செயல்படுத்தலாம். ஆளுநரே மாநிலத்தின் அரசியலமைப்புத் தலைவர். அவரது பெயராலே அனைத்து நிர்வாகமும் நடைபெறுகின்றன.
2. மாநில சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மை பெறும் கட்சியின் தலைவரை முதலமைச்சராக ஆளுநர் நியமனம் செய்கிறார்.
3. முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் அமைச்சரவையின் மற்ற உறுப்பினர்களை நியமனம் செய்கிறார்.
4. மாநிலத்தின் அரசு தலைமை வழக்கறிஞரை நியமனம் செய்து அவரது ஊதியத்தையும் நிர்ணயம் செய்கிறார். ஆளுநர் விரும்பும் வரை அரசு வழக்குரைஞர் அவரது பதவியைத் தொடரலாம்.
5. அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமனம் செய்கிறார். இருப்பினும் ஆளுநரால் இவர்களை பணிநீக்கம் செய்ய முடியாது. குடியரசுத் தலைவரால் மட்டுமே பணி நீக்கம் செய்ய முடியும்.
6. மாநில தலைமை தேர்தல் ஆணையரை நியமனம் செய்து, அவரது பணிக்காலம், பணியின் தன்மையைத் தீர்மானிக்கிறார். இருந்த போதிலும், உயர் நீதிமன்ற நீதிபதியைப் பதவி நீக்கம் செய்யும் அதே முறையைப் பின்பற்றியே மாநிலத் தலைமைத் தேர்தல் ஆணையரைப் பதவி நீக்கம் செய்யலாம்.
7. ஆளுநர், மாநிலப் பல்கலைக்கழகங்களின் வேந்தராக செயல்படுவதுடன், துணை வேந்தர்களையும் நியமனம் செய்கிறார்.
8. குடியரசுத் தலைவரின் அவசரநிலை பிரகடனம் செய்யப்படும் பொழுது, குடியரசுத்தலைவரின் பெயரில் இவரே மாநிலத்தை நேரடியாக ஆட்சி செய்கிறார்.

**சட்டமன்ற அதிகாரங்கள்**

1. ஆளுநர் மாநில சட்டமன்றத்தின் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாவார். ஆனால், அவர் சட்டமன்றத்தின் உறுப்பினராக இல்லை. ஆளுநர் பின்வரும் சட்டமன்ற அதிகாரங்களைப் பெற்றுள்ளார்.
2. ஆளுநர் சட்டமன்ற கூட்டத்தைக் கூட்டவும் ஒத்திவைக்கவும் சட்டமன்றத்தைக்கலைக்கவும் உரிமைப் பெற்றுள்ளார்.
3. பொதுத் தேர்தல் முடிந்து முதலமைச்சர் மற்றும் மற்ற அமைச்சர்களின் நியமனத்திற்குப் பிறகு நடைபெறும் சட்டமன்றக்கூட்டத்தின் முதல் கூட்டத்தில் உரை நிகழ்த்துகிறார்.
4. நிலுவையிலுள்ள மசோதா குறித்து சட்டமன்ற அவைகளுக்கு ஆளுநர் செய்தி அனுப்பலாம்.
5. சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் பணியிடம் காலியாக இருக்கும்பொழுது சட்டமன்றத்தை தலைமை ஏற்று நடத்த எந்த சட்டமன்ற உறுப்பினரை வேண்டுமானாலும் ஆளுநர் நியமனம் செய்யலாம்.
6. ஆங்கிலோ – இந்தியன் வகுப்பினரிலிருந்து ஓர் உறுப்பினரை மாநில சட்டமன்றத்திற்கு நியமனம் செய்யலாம்.
7. கலை, இலக்கியம், அறிவியல், கூட்டுறவு இயக்கம் மற்றும் சமூக சேவை போன்றவற்றில் சிறந்து விளங்கும் நபர்களைத் தேர்ந்தெடுத்து மாநில சட்டமேலவையின் 6 இல் 1 பங்கு இடங்களுக்கு அவர்களை நியமனம் செய்கிறார்.
8. சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதியின்மை குறித்து தேர்தல் ஆணையத்துடன் கலந்தாலோசித்து முடிவு செய்கிறார்.
9. மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்படும் ஒவ்வொரு மசோதாவும் ஆளுநர் கையொப்பமிட்ட பின்னர் மட்டுமே சட்டமாகும். ஆனால், சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதா ஆளுநர் ஒப்புதலுக்காக அனுப்பப்படும் பொழுது ஆளுநர் கையொப்பமிடலாம் அல்லது நிறுத்தி வைக்கலாம் அல்லது மீண்டும் மறு பரிசீலனைக்காக சட்டமன்றத்திற்கே திருப்பி அனுப்பலாம்.
10. மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட எந்த ஒரு மசோதாவும் மாநில உயர் நீதிமன்றத்தின் அதிகாரத்திற்குத் தீங்கு விளைவிக்கும் நிலையில் இருக்குமாயின், அதனைக் குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக நிறுத்திவைக்கலாம்.
11. அரசியலமைப்பு சட்டப்பிரிவு 213–ன் கீழ் ஆளுநர் மாநில சட்டமன்றம் நடைபெறாத பொழுது அவசர சட்டத்தைப் பிறப்பிக்கலாம். ஆனால் அந்த அவசரச்சட்டம், 6 மாதத்திற்குள் மாநில சட்டமன்றத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும். அவசரச்சட்டத்தை எந்நேரத்திலும் ஆளுநர் திரும்பப் பெறலாம்.

12. மாநிலத்தின் ஆண்டு நிதிநிலை அறிக்கை, அரசுப்பணியாளர் தேர்வாணையக் குழுவின் அறிக்கை, அரசின் தணிக்கைக்குழு அறிக்கைகளை சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கின்றார்.

**நிதி அதிகாரங்கள்**

1. மாநிலத்தின் ஆண்டு வரவு செலவு திட்டத்தினை தயார் செய்து சட்டமன்றத்தில் அறிமுகம் செய்யும் கடமையை ஆளுநருக்கு அரசியலமைப்பு வழங்குகிறது. தேவைப்பட்டால், துணை வரவு செலவு திட்டத்தையும் அறிமுகம் செய்யலாம்.
2. ஆண்டு நிதிநிலை அறிக்கையை (வரவு செலவு திட்டம்) சட்டமன்றத்தில் அறிமுகம் செய்ய காரணமாகிறார்.
3. மாநில சட்டமன்றத்தில் மாநில நிதியமைச்சர் மூலம் துணை வரவு செலவு திட்டத்தை தேவைப்பட்டால் சமர்ப்பிக்கின்றார்.
4. ஆளுநரின் முன் அனுமதியுடன்தான் பண மசோதாவை சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்த முடியும்.
5. ஆளுநரின் பரிந்துரையின்றி நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது.
6. அரசின் எதிர்பாராச் செலவினங்களுக்காக ஆளுநர் அவசர நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்ய முடியும்.
7. பஞ்சாயத்துகள் மற்றும் நகராட்சிகளின் நிதிநிலையை ஆய்வு செய்ய ஒவ்வொரு ஐந்தாண்டிற்கு ஒருமுறை நிதி ஆணையம் ஒன்றை அமைக்கிறார்.

**நீதித்துறை அதிகாரங்கள்**

1. மாநில அரசின் தலைமை வழக்குரைஞரை நியமனம் செய்கிறார்.
2. கீழ் நீதிமன்றங்களின் நீதிபதிகளை நியமனம் செய்கிறார்.
3. உயர் நீதிமன்றத்தின் ஆலோசனையின் பேரில் மாவட்ட நீதிபதிகளின் நியமனம் மற்றும் பதவி உயர்வு போன்ற பணிகளை மேற்கொள்கிறார்.
4. ஆளுநரின் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவர் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியை நியமனம் செய்கிறார்.
5. குற்றவாளிகளின் கருணை மனு அடிப்படையில் குற்றவாளிகளை மன்னிக்கலாம் அல்லது குற்றவாளிகளின் தண்டனையைக் குறைக்கலாம் அல்லது நிறுத்தி வைக்கலாம்.

**விருப்புரிமை அதிகாரங்கள்**

1. குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக ஆளுநர் ஒரு மசோதாவை நிறுத்தி வைக்க முடியும்.
2. மாநிலத்தில், குடியரசுத் தலைவரின் ஆட்சிக்கு ஆளுநர் பரிந்துரை செய்கிறார்.
3. மாநில நிர்வாகம் மற்றும் சட்டமன்ற செயல்பாடுகள் தொடர்பானச் செய்திகளை முதலமைச்சரிடமிருந்து ஆளுநர் பெறுகிறார்.

4. மாநில சட்டமன்ற பொதுத் தேர்தலில் எந்த கட்சியும் அறுதி பெரும்பான்மையைப் பெறாத போது, ஆளுநர் எந்தக் கட்சி தலைவரையும் ஆட்சி அமைக்க அழைக்கலாம்.
5. சட்டமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பின் பொழுது பெரும்பான்மையை நிரூபிக்க முடியாமல் போனால் அமைச்சரவையை ஆளுநர் கலைக்க முடியும்.
6. அமைச்சரவை பெரும்பான்மையை இழந்தால், சட்டமன்றத்தை ஆளுநர் கலைக்கமுடியும்.

**அவசரகால அதிகாரங்கள்**

மாநில அரசு அரசியலமைப்பு விதிகளுக்கேற்ப செயல்படவில்லை என்று ஆளுநர் உறுதியாக நம்பினால் அரசியலமைப்பு சட்டப்பிரிவு 356—ன் கீழ் மாநில அரசை கலைக்க குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்யலாம். மாநில அரசு கலைக்கப்பட்ட வுடன், மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைக்கு வரும். ஆளுநர் குடியரசுத் தலைவரின் பிரதிநிதியாக மாநிலத்தை நிர்வாகம் செய்கிறார்.

**ஆளுநரின் சிறப்புரிமைகள்**

சட்டப்பிரிவு 361(1) ஆளுநருக்கான கீழ்க்காணும் சிறப்புரிமைகளை வழங்குகின்றது.

1. தனது பணிகள் மற்றும் அதிகாரத்தைச் செய்ய வேண்டும் என எண்ணுவதிலும் செயல்படுத்துவதிலும் எந்த நீதிமன்றத்திற்கும் பதில் அளிக்க வேண்டிய அவசியமில்லை.
2. ஆளுநரின் பதவிக்காலத்தில் அவர் மீது குற்றவியல் நடவடிக்கைகளை அவருக்கு எதிராக எந்த நீதிமன்றத்திலும் தொடர முடியாது.
3. ஆளுநரின் பதவி காலத்தில் அவர் மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்தவோ அல்லது அவரை கைது செய்யவோ எந்த நீதிமன்றமும் உத்தரவு பிறப்பிக்க முடியாது.
4. மாநில ஆளுநருக்கு எதிராக உரிமையியல் வழக்குகளைத் தொடர முடியாது.

**முதலமைச்சர்**

அரசியலமைப்பால் அமைக்கப்பட்ட நாடாளுமன்ற முறையில் அமைந்த அரசில், ஆளுநர், மாநிலத்தின் பெயரளவு நிர்வாகியாகவும் முதலமைச்சர் உண்மையான நிர்வாகியாகவும் உள்ளனர். வேறு வகையில் கூற வேண்டுமாயின் ஆளுநர் மாநிலத்தின் அரசின் தலைவர் முதலமைச்சர் அரசாங்கத்தின் தலைவர் ஆவார்.

**முதலமைச்சரின் நியமனம்**

முதலமைச்சர் மாநில ஆளுநரால் நியமனம் செய்யப்படுகிறார். சட்டமன்றத்தில் பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவர் அல்லது பெரும்பான்மை பெற்ற கூட்டணிக் கட்சியின் தலைவர் முதலமைச்சராக நியமிக்கப்படுகிறார். ஒருவேளை எந்த கட்சியும் முழுமையான பெரும்பான்மை பெறாத பொழுது அல்லது பெரும்பான்மை பெற்றவர்கள் தங்களது தலைவரைத் தேர்ந்தெடுக்க தவறும்

பொழுது ஆளுநர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அடுத்ததாக பெரும்பான்மை பெற்ற பெரிய கட்சியை அமைச்சரவை அமைக்க அழைப்பார். அவ்வாறு அழைக்கப்படும் தலைவர், ஆளுநரால் வழங்கப்படும் கால அவகாசத்திற்குள் சட்டமன்றத்தில் அவரது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும்.

முதலமைச்சரின் பதவிக்காலம் நிர்ணயிக்கப்பட்ட ஒன்றல்ல. சட்டமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவு எவ்வளவு காலத்திற்கு தொடர்கிறதோ அதுவரை அவர் முதலமைச்சராக நீடிக்கலாம். சட்டமன்றத்தில் எப்பொழுது அவர் பெரும்பான்மையை இழக்கிறாரோ அப்பொழுது தனது பதவியை இராஜினாமா செய்கிறார். சட்டமன்றத்தில் மற்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் போலவே முதலமைச்சரின் பதவிக்காலமும் 5 ஆண்டுகள் ஆகும்.

**முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்**

மாநில நிர்வாகத்தின் உண்மையான தலைவர் முதலமைச்சர் ஆவார். முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளாவன.

1. அமைச்சரவை தொடர்பானவை
2. ஆளுநர் தொடர்பானவை
3. சட்டமன்றம் தொடர்பானவை
4. இதர பணிகள் மற்றும் அதிகாரங்கள்

**அமைச்சரவை தொடர்பானவை**

அமைச்சரவையின் தலைவரான முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளாவன.

1. முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் ஆளுநர் அமைச்சர்களை நியமிக்கிறார்.
2. அமைச்சர்களுக்குத் துறைகளை ஒதுக்கீடு செய்கிறார்.
3. தனது அமைச்சரவையை மாற்றியமைக்கிறார்.
4. ஓர் அமைச்சருடன் கருத்து வேறுபாடுகள் எழும்பொழுது, இராஜினாமா செய்யும்படி கேட்கிறார் அல்லது பதவி நீக்கம் செய்ய ஆளுநருக்குப் பரிந்துரை செய்கிறார்.
5. அமைச்சரவைக் கூட்டத்தைத் தலைமை ஏற்று நடத்தி முடிவுகளை எடுக்கிறார்.
6. அமைச்சரவையின் குழப்பத்தைத் தனது இராஜினாமா மூலம் முடித்து வைக்கிறார்.
7. அமைச்சர்கள் அனைவரையும் கட்டுப்படுத்தி, வழிநடத்தி, இயக்கி, அவர்களது நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறார்.

**ஆளுநர் தொடர்பானவை**

ஆளுநருக்கும் அமைச்சரவைக்குமிடையே செய்தித்தொடர்புகளில், முதலமைச்சர் முதன்மையாக விளங்குகிறார். கீழ்க்காணும் அலுவலர்களின் நியமனங்கள் தொடர்பாக ஆளுநருக்கு ஆலோசனை வழங்குகிறார்.

1. மாநில அரசு வழக்குரைஞர்

2. மாநில தேர்தல் ஆணையர்
3. அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
4. மாநில திட்டக்குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
5. மாநில நிதிக்குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்

**சட்டமன்றம் தொடர்பானவை**

1. சட்டமன்ற கூட்டத்தொடரை ஆரம்பிக்கவும் ஒத்திவைக்கவும் ஆளுநருக்கு முதலமைச்சர் ஆலோசனை வழங்குகிறார்.
2. சட்டமன்றத்தில் அரசின் கொள்கைகளை அறிவிக்கிறார்.
3. சட்டமன்றத்தில் மசோதாக்களை அறிமுகப்படுத்துகிறார்.
4. எந்நேரத்திலும் சட்டமன்றத்தைக் கலைக்க ஆளுநருக்குப் பரிந்துரை செய்கிறார்.

**இதர அதிகாரங்கள் மற்றும் பணிகள்**

1. ஆளுங்கட்சியின் தலைவராக முதலமைச்சர் கட்சியைக் கட்டுப்படுத்தி அதன் ஒழுக்கத்தை மேம்படுத்துகிறார்.
2. மாநிலத்தின் தலைவராகப் பல்வேறுபட்ட மக்களின் தேவைகளை உற்று நோக்குகிறார்.
3. மாநிலத்தின் அரசியல் தலைமையாக பல்வேறு பணிகளைக் கட்டுப்படுத்தி, மேற்பார்வையிட்டு, பல்வேறு துறை செயலர்களின் பணிகளை ஒருங்கிணைக்கிறார்.
4. மாநில அரசு சுமூகமாக இயங்க மத்திய அரசுடன் இணக்கமான உறவை வைத்துக்கொள்கிறார்.

**அமைச்சரவை**

அமைச்சரவை மாநில சட்டமன்றத்திற்குக் கூட்டாகப் பொறுப்பானது. அமைச்சரவைக்குழு வின் அமைச்சர்கள் அனைவரும் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர் அல்லாத ஒருவர் அமைச்சராக பதவியேற்றால் 6 மாத காலத்திற்குள் அவர் சட்டமன்ற உறுப்பினராக வேண்டும். முதலமைச்சரின் தலைமையின் கீழ் அமைச்சர்கள் அனைவரும் ஒரு குழுவாக செயல்பட வேண்டும். முதலமைச்சர் எவ்வளவு காலம் பதவியில் நீடிக்கிறாரோ அதுவரை அமைச்சரவை தொடரும். சட்டமன்றத்தில் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டால் மாநில அமைச்சரவை இராஜினாமா செய்ய வேண்டும்.

அரசியலமைப்பு சட்டப்பிரிவு 163 ஆளுநருக்கு ஆலோசனைகள் வழங்க அமைச்சரவையை உருவாக்க வழிவகை செய்திருக்கிறது. சட்டப்பிரிவு 163(1)—ன் படி, முதலமைச்சரை தலைவராகக் கொண்ட அமைச்சரவை ஆளுநருக்கு தேவைப்படும் பொழுது உதவி செய்யவும் ஆலோசனை வழங்கவும் வேண்டும்.

**அமைச்சர்களுடனான மற்ற விதிகள்**

சட்டப்பிரிவு 164(1), ஆளுநரால் முதலமைச்சர் நியமிக்கப்படுவதைக் கூறுகிறது. மற்றும் முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் மற்ற அமைச்சர்களையும் நியமிக்க வகை செய்கிறது.

ஆளுநர் விரும்பும் வரை முதலமைச்சர் பதவியில் தொடரலாம். முதலமைச்சர் உட்பட மொத்த அமைச்சர்களின் எண்ணிக்கை மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 15 விழுக்காட்டை தாண்டக்கூடாது என சட்டப்பிரிவு 164 (1A) கூறுகிறது.

**அமைச்சரவையின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்**

மாநில அரசிற்கான கொள்கைகளை உருவாக்கி அவற்றை திறம்பட நடைமுறைப்படுத்துகிறது.

1. சட்டமன்ற நிகழ்ச்சிகளை முடிவு செய்து எல்லா முக்கியமான மசோதாக்களுக்கும் ஆதரவளிக்கிறது.
2. நிதிக்கொள்கையைக் கட்டுப்படுத்துவதுடன் மாநில பொது நலனுக்கான வரிக்கொள்கையை முடிவு செய்கிறது.
3. சமூக, பொருளாதார மாற்றங்களுக்கான நிகழ்ச்சிகள் மற்றும் திட்டங்களை உருவாக்கி அதன்படி மாநில அரசின் தலைமையில் பல்வேறு தொடர்புடையதுறைகள் உருவாக்கப்படுகின்றன.
4. முக்கியமான துறைத் தலைவர்களின் நியமனங்களைச் செய்கிறது.
5. மற்ற மாநிலங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சி மேற்கொள்கிறது.
6. கீழ் நீதிமன்ற நீதிபதிகளின் நியமனங்களில் ஆளுநருக்கு ஆலோசனை வழங்குகிறது.
7. மாநிலத்திற்கான செலவுகளைச் சமாளிக்க திட்ட அறிக்கையை உருவாக்குகிறது. ஒரு மசோதா சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும் போது அது சாதாரண மசோதாவா அல்லது நிதி மசோதாவா என்று தீர்மானிக்கிறது.
8. அமைச்சரவையின் ஒவ்வொரு அமைச்சரின் பணிகளைக் கட்டுப்படுத்தி, கண்காணித்து ஒருங்கிணைக்கின்றது.
9. ஆண்டு வரவு செலவு திட்டம் (Budget) அமைச்சரவையால் இறுதி செய்யப்படுகிறது.

**மாநில அரசின் தலைமை வழக்கறிஞர்:**

**நியமனம் மற்றும் காலம்**

1. இவர் மாநில ஆளுநரால் நியமிக்கப்படுகிறார், அவர் ஒரு உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்படுவதற்கு தகுதியான நபராக இருக்க வேண்டும்.
2. அதாவது, இந்திய குடிமகனாக இருக்க வேண்டும் மற்றும் பத்து ஆண்டுகள் நீதித்துறை பதவியில் இருந்திருக்க வேண்டும் அல்லது பத்து ஆண்டுகள் உயர் நீதிமன்றத்தின் வழக்கறிஞராக இருக்க வேண்டும்.

3. தலைமை வழக்கறிஞரின் பதவிக் காலத்தை அரசியலமைப்பு நிர்ணயிக்கவில்லை மேலும் பதவி நீக்குவதற்கான நடைமுறை மற்றும் காரணங்களைக் தெரிவிக்கவில்லை.
4. தலைமை வழக்கறிஞர் மாநில ஆளுநரின் விருப்பத்தின் போது பதவி வகிக்கிறார், அதாவது எந்த நேரத்திலும் ஆளுநரால் நீக்கப்படலாம்.
5. ஆளுநரிடம் ராஜினாமாவை சமர்ப்பிப்பதன் மூலம் இந்த பதவியை விட்டு வெளியேறலாம்.
6. மேலும், தலைமை வழக்கறிஞரின் ஊதியத்தை அரசியலமைப்பு நிர்ணயிக்கவில்லை மற்றும் கவர்னர் தீர்மானிக்கக்கூடிய ஊதியத்தைப் பெறுகிறார்.
7. இது முழுநேர பதவி அல்ல, மேலும் தனிப்பட்ட முறையில் வழக்கறிஞராக பணியாற்றலாம்.
8. இந்த பதவிக்கு மீண்டும் நியமிக்கப்படலாம் அல்லது பதவியில் நீடிப்பதை நிறுத்திய பிறகு வேறு எந்த அரசாங்க நியமனத்திற்கும் தகுதியுடையவர்.

**கடமைகள் மற்றும் செயல்பாடுகள்:**

1. மாநிலத்தில் அரசாங்கத்தின் தலைமை சட்ட அதிகாரியாக பின்வரும் பணிகளைச் செய்கிறார்.
2. ஆளுநரால் அவருக்கு பரிந்துரைக்கப்படும் சட்டப்பூர்வ விஷயங்களில் மாநில அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.
3. மாநில ஆளுநரால் ஒதுக்கப்படும் சட்டப்பூர்வமான பிற கடமைகளைச் செய்ய வேண்டும்.
4. அரசியலமைப்பு அல்லது வேறு ஏதேனும் சட்டத்தால் வழங்கப்பட்ட செயல்பாடுகளை நிறைவேற்றுவது.
5. தலைமை வழக்கறிஞர் தனது உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றுவதில் மாநிலத்தில் உள்ள எந்தவொரு நீதிமன்றத்திலும் ஆஜராக உரிமை உண்டு.
6. தலைமை வழக்கறிஞருக்கு மாநில சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் பேசுவதற்கும் பங்கு பெறுவதற்கும் உரிமை உண்டு.
7. மேலும், அவர் உறுப்பினராக பெயரிடப்பட்ட மாநில சட்டமன்றத்தின் எந்தவொரு குழுவின் நடவடிக்கைகளிலும் பங்கேற்க அவருக்கு உரிமை உள்ளது, ஆனால் வாக்களிக்கும் உரிமை இல்லை.
8. மாநில சட்டமன்ற உறுப்பினருக்குக் கிடைக்கும் அனைத்துச் சலுகைகளும் விலக்குகளும் இவரால் அனுபவிக்கப்படுகின்றன.

**வரம்புகள்:**

**அட்வகேட் ஜெனரலுக்கு முரண்பாடுகள் மற்றும் சிக்கல்களைத் தடுக்க சில வரம்புகள் உள்ளன:**

1. அட்வகேட் ஜெனரல், மாநில அரசுக்கு எதிராக ஆலோசனை கூறவோ அல்லது சுருக்கமாக நடத்தவோ கூடாது.

2. மாநில அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்க அல்லது ஆஜராக அவர் அழைக்கப்பட்ட வழக்குகளில் அவர்/அவள் ஆலோசனை கூறவோ அல்லது சுருக்கமாக நடத்தவோ கூடாது.
3. மாநில அரசின் அனுமதியின்றி அட்வகேட் ஜெனரல் குற்றஞ்சாட்டப்பட்ட நபரை கிரிமினல் வழக்குகளில் வாதாடக் கூடாது.
4. மாநில அரசின் அனுமதியின்றி எந்த நிறுவனத்திலோ அல்லது நிறுவனத்திலோ இயக்குநராக நியமனம் செய்யப்படுவதை அவர்/அவள் ஏற்கக் கூடாது.

**சமீபத்திய வளர்ச்சிகள்:**

1. அட்வகேட் ஜெனரல் அரசாங்கத்தின் ஒரு பகுதி— உச்ச நீதிமன்றம் ஒரு விசாரணையின் போது ஒரு அட்வகேட் ஜெனரல் அரசாங்கத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படுவதைக் கவனித்தார், மேலும் அட்வகேட் ஜெனரல் என்ன நினைக்கிறார்களோ அதுதான் அரசாங்கம் நினைக்கிறது.
2. அரசியல் காரணங்களுக்காக அழுத்தம்: மேற்கு வங்கத்தில் 4 அட்வகேட் ஜெனரல்கள் அடுத்தடுத்து ராஜினாமா செய்துள்ளனர். சில ராஜினாமாக்கள் மீது அரசியல் காரணங்களுக்காக சட்ட வல்லுனர்களை அரசாங்கம் அழுத்தம் கொடுக்கிறது என்று பல பிரபல வழக்கறிஞர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.
3. **அட்வகேட் ஜெனரல்கள் நியமனம் குறித்த கேள்விகள்:** எஸ். காசிராமலிங்கம் VS தமிழக அரசின் தலைமைச் செயலாளர் என்பது, அரசின் அட்வகேட் ஜெனரல் நியமனம் குறித்து கேள்வி எழுப்பிய வழக்குகளில் ஒன்று.

**மாநில அட்வகேட் ஜெனரல் சம்பளம்:**

அட்வகேட் ஜெனரல் ஆஃப் ஸ்டேட் பெறும் ஊதியம் இந்திய அரசியலமைப்பால் நிர்ணயிக்கப்படவில்லை. இது மாநிலங்களுக்கு ஏற்ப மாறுபடும். இந்தியாவில் அட்வகேட் ஜெனரலின் சம்பளத்தை மாநில ஆளுநர் நிர்ணயம் செய்கிறார்.

அட்வகேட் ஜெனரல் ஆஃப் ஸ்டேட்ஸ் (நவம்பர் 2020) சம்பளம் தொடர்பான சில தற்போதைய அறிவிப்புகள்:

**பஞ்சாபில் சட்ட அதிகாரிகளின் சம்பளத்தை மாநில அரசு உயர்த்தியுள்ளது:**

1. ஜூனியர் மோஸ்ட் சட்ட அதிகாரி/உதவி அட்வகேட் ஜெனரல் — ரூ. 55000/மாதம்
2. துணை அட்வகேட் ஜெனரல் மற்றும் மூத்த துணை அட்வகேட் ஜெனரல் — ரூ. 90000/மாதம்
3. நிறுவன அதிகாரிகள் – ரூ. 40000/மாதம்
4. அட்வகேட் ஜெனரல் — மதிப்பிடப்பட்ட ரூ. 1.25 லட்சம்/மாதம்

**குறிப்பு:** மாநில அட்வகேட் ஜெனரலின் அலுவலகத்தில் ஜூனியர், துணை மற்றும் மூத்த அட்வகேட் ஜெனரல் இருக்கலாம்.

**அட்வகேட் ஜெனரலுக்கும் இந்திய அட்டர்னி ஜெனரலுக்கும் உள்ள வேறுபாடு:**

1. இந்திய அரசியலமைப்பின் 76 வது பிரிவு இந்திய அட்டர்னி ஜெனரலைப் பற்றிக் கூறுகிறது, அதே சமயம் பிரிவு 165 இந்தியாவின் அட்வகேட் ஜெனரல் அலுவலகத்தைப் பற்றிக் கூறுகிறது.
2. அட்வகேட் ஜெனரல் ஆ்ஃப் ஸ்டேட் அலுவலகம் இந்தியாவின் அட்டர்னி ஜெனரல் அலுவலகத்துடன் ஒத்துப்போகிறது, ஏனெனில் முந்தையவர் மாநிலத்தின் தலைமை சட்ட அதிகாரி மற்றும் பிந்தையவர் இந்தியாவின் மிக உயர்ந்த சட்ட அதிகாரி.
3. மாநிலத்தின் சட்ட விவகாரங்கள் அட்வகேட் ஜெனரலுக்குப் பரிந்துரைக்கப்படும் அதே வேளையில் தொழிற்சங்கம் அல்லது மத்திய அரசின் சட்ட விஷயங்கள் இந்திய அட்டர்னி ஜெனரலுக்குப் பரிந்துரைக்கப்படுகின்றன.